மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்
පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, උතුරු පළාත
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTHERN PROVINCE

මගේ අංකය / எனது இல. / My No: NP/07/10/01/179
මගේ අංකය / உமது இல. / Your No:
දිනය / திகதி / Date: 2025.02.05

மிக அவசரமானது

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (2024) தோற்றிய பரீட்சார்த்திகளில் மாற்றுத்திறனாளிகள் விபரம் கோரல்.

குறித்த ஆட்சேர்ப்புப் பரீட்சைக்காக எம்மால் 2024.10.29ம் திகதி வெளியிடப்பட்ட 29/2024 இலக்க சுற்றறிக்கைக்கமைவாகவும், வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு அமைவாகவும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு பரீட்சார்த்திகளின் பெறுபேற்று விபரம், வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் குறித்த பதவிக்கான ஆட்சேர்ப்பு விளம்பரம் ஆகியவற்றுக்கமைவாக மேற்குறித்த பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெற்றுக்கொண்டதுடன், இருபாடங்களின் மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது 100 புள்ளிகளை பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளில், குறித்த விளம்பரத்திற்கமைவான விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் மாற்றுத் திறனாளிகளுக்கான நிலைமையின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டிருப்பின், குறித்த அலுவலர்களிடமிருந்து அவர்களின் குறித்த நிலையை உறுதிப்படுத்தும் மருத்துவ அத்தாட்சிப்படுத்தல் ஆவணங்களுடன் அவர்களது முழுப்பெயர், பரீட்சை சுட்டெண், தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் விசேடதேவையின் தன்மை ஆகிய விபரங்களை பெற்று அவற்றினை தொகுத்து **2025.02.14ம் திகதிக்கு முன்னர்** எமக்குக் கிடைக்கக் கூடியவாறு எமது துரித பரிசோதனைக்காக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விடயம் தங்களது அமைச்சின் / திணைக்களத்தின் / அலுவலகத்தின் கீழ் கடமையாற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவருதலை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

பொ.குகநாதன்,
செயலாளர்.

பொ.குகநாதன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

Secretary : 021-221 9980 Office : 021-221 9981
Asst. Secretary : 021-205 4190 Exam Unit : 021-221 9939
A.O : 021-221 9938 Fax No : 021-221 9940
இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
අංකය 393/48, කොවිල් පාර, නල්ලූර්, යාපනය.
No. 393/48, Temple Road, Nallur, Jaffna.
web : www.np.gov.lk
e-mail : admppscnp@gmail.com
examppscnp@gmail.com
finppscnp@gmail.com